**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.169/2023**

**நாள் : 28.01.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மோகன் | மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தசாமி | வயது | : | 37 |
| ஊர் | : | அத்திபள்ளம் | தொழில் | : | பொக்லைன் ஆப்ரேட்டர் |
| வட்டம் | : | போச்சம்பள்ளி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. விபத்து குறித்து ஊத்தங்கரை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல்– ம.சா.ஆ.1

2. மனுதாரரின் மருத்துவ விடுப்பு அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. மனுதாரரின் விபத்து பதிவேடு நகல் – ம.சா.ஆ.3

4. அரசு பேருந்தின் பதிவு சான்றின் நகல் – ம.சா.ஆ.4

5. பேருந்து ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல்– ம.சா.ஆ.5

6. மனுதாரரின் மருத்துவ செலவு ரூ.1,80,484/–க்கான ரசீதுகள் – ம.சா.ஆ.6 வரிசை (21 எண்ணிக்கை)

7. மனுதாரரின் ஆதார் அட்டை நகல்– ம.சா.ஆ.7

8. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல்– ம.சா.ஆ.8

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் ஊத்தங்கரையில் இருந்து மத்தூரை நோக்கி போனேன். ஊத்தங்கரை அரசு உயர் நிலைப்பள்ளி அருகே விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் எனக்கு எதிர் திசையில் பெங்களூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கி அரசு பேருந்து வந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பல்சர் இருசக்கர வாகனத்தில பயணித்தேன். அந்த வாகனம் எனக்கு சொந்தமானது. அந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் எடுத்திருந்தேன். ஆனால் விபத்து தேதியில் இன்சூரன்ஸ் முடிந்திருந்தது. விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் குடிபோதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற நிலையில் என்னை கவனித்த அரசு பேருந்து ஓட்டுநர் பேருந்தை நிறுத்தியபோதும், நான்தான் வலிய வந்து அரசு பேருந்தின்மீது மோதி விபத்தை ஏற்டுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

விபத்திற்கு பின்னிட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு நான் சேலம் மணிப்பால் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். விபத்தில் எனக்கு தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் ஹெல்மெட் அணிந்து பயணித்திருந்தால் தலைக்காயத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த சமயத்தில் நான் குடிபோதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

விபத்து சம்பந்தமாக ஊத்தங்கரை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கானது Mistake of fact என முடிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பொக்லைன் ஆப்ரேட்டராக வேலை பார்த்து மாதம் ரூ.25,000/– சம்பாதித்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள நஷ்ட ஈட்டுத்தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்கில் முன்னிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காகவேண்டி மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.